செய்தி வெளியீடு எண்.13 தேதி: 12.03.2026

# <u>மக்கள் மாளிகை, தமிழ்நாடு – பத்திரிக்கை செய்தி</u>

## <u>திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், அவர்கள் தமிழ்நாட்டின் 27-வது ஆளுநராக பதவியேற்று கொண்டார்</u>

திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், அவர்கள் இன்று (12.03.2026) தமிழ்நாட்டின் 27-வது ஆளுநராக பதவியேற்று கொண்டார். மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு தலைமை நீதிபதி நீதியரசர் திரு. சுஷ்ருத் அர்விந்த் தர்மாதிகாரி அவர்கள், சென்னை, மக்கள் மாளிகை வளாகத்தில் உள்ள பாரதியார் மண்டபத்தில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், அவர்களுக்கு ஆளுநராக பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இவ்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி. அனகா அர்லேகர், அவர்களும் உடன் இருந்தார்கள்.

இந்த பதவியேற்பு விழாவில் முனைவர் எல். முருகன், மாண்புமிகு தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை மற்றும் பாராளுமன்ற விவகாரங்களுக்கான மத்திய இணை அமைச்சர், இந்திய அரசு, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் அமைச்சர் பெருமக்கள், மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதிபதிகள், மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மேயர் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

சென்னையில் உள்ள ஆயுதப்படை அமைப்புகளின் தலைவர்கள், மத்திய மற்றும் மாநில அரசுகளின் மூத்த அலுவலகர்கள், டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன், தெலுங்கானா மாநில முன்னாள் ஆளுநர் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இவ்விழாவில் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாநில மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், மாநிலத்தில் செயல்படும் மத்திய அரசின் பல கல்வி நிறுவனங்களின் இயக்குநர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

மேலும் தொழில் முனைவோர், முன்னணி அச்சு மற்றும் ஒளிபரப்பு ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள், மருத்துவத் துறையின் சிறப்பு நிபுணர்கள், தொழிலதிபர்கள், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் (MSME) துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள், சேவை அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள் (NGO) மற்றும் சட்டத் துறையைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட சமூகத்தின் பல்வேறு துறையை சேர்ந்த புகழ்பெற்ற நபர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

..........................................................................................................................................

**மக்கள் மாளிகை, சென்னை** **வெளியீடு:**
**நாள்: 12.03.2026** **மக்கள் தொடர்பு அலுவலகம்**